Pastoral Letter No/GR/46/2022

# ஆயா் திருமுகம்

**ஈசோ மெசியாவில் அன்பிற்குரிய அருட்தந்தையரே! அருட்சகோதரிகளே! அன்பு இறைமக்களே! நம் தந்தையாம் கடவுளிடமிருந்தும், ஆண்டவராம் ஈசோ மெசியாவிடமிருந்தும் அமைதியும் அருளும் உரித்தாகுக!**

தவக்காலம் மீட்பின் காலம்; இரக்கத்தின் காலம்; ஆண்டவரின் அளப்பெரிய அன்பை உணா்த்தும் காலம்; இறைவனில் மட்டும் நம்பிக்கை கொள்ளும் காலம்; இறைகுரலுக்காக காத்திருக்கும் காலம்; இக்காலம் ஆண்டவரை எதிர்நோக்கும் காலம் என்று திருபாடல் 34:5 - ல் நாம் வாசிப்போம் "ஆண்டவரை நோக்கிப் பார்தோர் மகிழ்ச்சியால் மிழிா்ந்தனா்" என்று இக்காலம் நம்மை மீட்பின் பாதையில் நம் வாழ்க்கையை தொடரத் தூண்டும் காலம்.

தவத்தின் பயன் என்பது "மனமாற்றம்"; எனவே, நம் செயல்பாடுகள் அனைத்தும் நாம் தவத்தை கடைபிடிக்கின்றோம் என்பதை உணா்த்த வேண்டும். "மனம் மாறியவா்கள் என்பதை அதற்க்கேற்ற செயல்களால் காட்டுங்கள்" என்று லூக்கா 3:8 –ல் நாம் வாசிக்கின்றோம். சக்கேயு தன் செயல்பாட்டால் மனமாற்றத்தை வெளிப்படுத்தியபோது ஆண்டவா் இயேசு "இவரும் ஆபிரகாமின் மகனே" (லூக் 19:9) என்று ஆசீா்வதித்து வாழ்வு கொடுத்ததை நாம் பாா்க்கிறோம். மனமாற்றம் மகிழ்ச்சியை வெளிப்படுத்தும் ஓா் அடையாளம். தவக்காலம் இறைவனை நோக்கிப்பாா்க்கும், மன்றாடும் காலம். விடுதலை பயண நூலில் மோசே ஆண்டவரோடு உறவாடிய நிகழ்வை பாா்க்கிறோம் (வி.ப. 24:8). மோசே மலையில் நாற்பது பகலும் நாற்பது இரவும் தங்கினாா். இது ஆழமான இறை உறவின் அடையாளம். முதல் அரசா் ஆகமத்தில் இறைவாக்கினா் எசியாவின் நோன்பும், இறை உறவும், இறை பராமரிப்பும் வெளிப்படுவதை பாா்க்கின்றோம் (1 அரசா் 19:8). எலியா 40 பகலும் எலியா 40 இரவும் நடந்து ஒரேபு என்ற கடவுளின் மலையை அடைந்தாா்". எனவே, கடவுளின் பிரசன்னத்தை உணர, அதை கண்டடைய தொடா் முயற்ச்சி தேவைப்படுகின்றது. யோனா 3-ம்

அதிகாரத்தில் நினிவே நகர் அழிக்கப்படும் என்ற செய்தியால் உள்ளம் குத்துண்ட "அரசன் தன் அரியணையை விட்டிறங்கி, அரச உடையை களைந்துவிட்டு சாக்கு உடை உடுத்து சாம்பல் மீது உக்கார்ந்தார். (யோனா 3:6). இங்கே சாக்கு – எளிமையை குறிக்கின்றது, சாம்பல் - வெறுமையை காட்டுகின்றது. எளிமையும், வெறுமையும் நம்மை வாழ்வுக்கு அழைத்து செல்லவேண்டும். "இயேசு 40 நாள் இரவும் பகலும் நோன்பிருந்தார்" என்று மத் 4:2 – ல் காண்கின்றோம். எனவே அன்பு இறைமக்களே இந்த நோன்பு காலம் நம்மை நல்ல செயல்பாட்டுக்கு அழைக்கவேண்டும். தருமம் செய்தல், தானம் செய்தல், ஏழைகளுக்கு உதவுதல் எல்லாமே வாழ்வு தரும் அடையாளங்களாக அமைகின்றன. "நீ செய்யும் தருமம் உன்னை சாவிலிருந்து விடுவிக்கும், இருளில் செல்லாதவாறு காப்பாற்றும்" (தோபி 4:10). இன்று ஆண்டவர் வாழ்வுக்கான வழியை திறந்து வைக்கின்றார். வாழ்வின் வழியை ஏற்பதும் ஏற்காமல் இருப்பதும் நம்மிடமே உள்ளது. "இதோ பார் வாழ்வையும் நன்மையையும், சாவையும் தீமையையும் இன்று நான் உனக்கு முன்பாக வைக்கின்றேன்" என்று இணைச்சட்டம் 30 ம் அதிகாரம் 15-ம் வசனத்தில் நாம் வாசிக்கின்றோம். எனவே அன்பான இறைமக்களே வாழ்வுக்கான வழியை தேர்ந்து, மனம்மாறி கிறிஸ்துவுக்கு உகந்தவர்களாய் வாழ இத்தவக்காலம் நம்மை அழைக்கின்றது.

நமது திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் தவக்கால சிந்தனையாக அரியதொரு கருத்தை பதிவு செய்திருக்கின்றார்; அதை உங்களிடம் பகிர்ந்து கொள்கின்றேன். பிரிக்க முடியா பிணைப்பாகிய உறவுகளோடு வெளிவேடமின்றி உள்ளார்ந்த அன்புடன் நம்மால் உறவாட முடிகின்றதா? அல்லது அவர்கள் நம்முடன் இருக்கும்போது உயர்வாக அவர்களைப் பேசுவதும் நம்மைவிட்டு அகன்றதும் அவர்களின் குறைகளை மிகைப்படுத்தி நற்பெயருக்கு களங்கங்கள் வருவிப்பவர்களாக இருக்கின்றோமா? என்று திருத்தந்தை நம் ஒவ்வொருவரையும் பார்த்து கேட்கின்றார். ஒருவேளை மனித பலவீனத்தால் இந்த குணநலன்களை நாம் பெற்றிருந்தால் இரண்டு செயல்களை நாம் செய்ய வேண்டும் என்று திருத்தந்தை அறிவுறுத்துகின்றார். முதலாவது ஜெபம், இரண்டாவது நமது நாவுக்கு ஒரு பெரிய கடிவாளம் இடவேண்டும்! இந்த இரண்டும் இத்தவக்காலத்தில் இறைவன் தரவேண்டுமென்று செபித்து முயன்று உழைப்போம். "உள்ளத்தில் அன்பு இல்லாமல் மலரைத் தூவினாலும் அது கல்லாக போய் சேரும், உள்ளத்தின் அன்பு கல்லை எறிந்தாலும் அது மலராகத் தொடும்".

மூன்றாம் உலகப்போரின் தொடக்கமாக இருக்குமோ என்று ஐய்யப்படும் அளவுக்கு ரஷ்யா உக்ரைன் மீது தாக்குதலை தொடர்ந்து உயிர்களை காவு-வாங்கிக் கொண்டிருக்கின்றது. எனவே இந்த தவக்காலத்தில் திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் நாம் அனைவரும் வருகின்ற பிப்ரவரி 28-ம் தியதி விபூதி திங்கள் அன்று உண்ணா நோன்பு இருந்து செபிக்க அழைப்பு விடுத்துள்ளார். நம் ஒவ்வொருவருடைய உள்ளத்திலும் எண்ணத்திலும் போரின் நிமித்தமாக அவதியுறுகின்ற மக்களுக்காக செபிப்போம்.

அன்பான இறைமக்களே, பிப்ரவரி 28-ம் தியதி விபூதி திங்களுடன் நாம் துவங்குகின்ற 50 நாள் தவக்காலம், நமது அன்பை ஆணிவேராகவும், ஜெபத்தை நம் வாழ்வின் அடித்தளமாகவும், தவ முயற்சிகள் நம்மை செம்மைப்படுத்தும் ஆயுதமாகவும் மாற்ற உதவட்டும். அப்போது எசாயா இறைவாக்கினர் கூறுவதுபோல "உன் ஒளி விடியல் போல் எழும்; விரைவில் உனக்கு நலமான வாழ்வு துளிர்க்கும்; உன் நேர்மை உனக்கு முன் செல்லும்; ஆண்டவரின் மாட்சி உனக்கு பின் சென்று காக்கும் (எசாயா 58:8).

அன்பு இறைமக்களே, இத்தவக்காலத்தில் நமது ஆலயத்தில் நடைபெறுகின்ற சிறப்பு திருப்பலியிலும், ஆராதனை பக்தி வழிபாடுகளிலும் தவறாமல் கலந்து கொண்டு இறை உறவை வளர்க்க உங்கள் அனைவரையும் கேட்டுக்கொள்கின்றேன். குறிப்பாக பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகளை ஊக்குவிக்கவும் ஆலயம் செல்ல ஆவண செய்யவும் கடமைப்பட்டவர்கள். நான் உங்களுக்காகவும் உங்கள் தனிப்பட்ட கருத்துக்களுக்காகவும் ஜெபிக்கின்றேன். உங்கள் ஜெபத்தில் என்னையும் மறைமாவட்டத்தையும் நினைவில் கொள்ளவும்.

நம் ஆண்டவராகிய ஈசோ மிசிகாவின் அருளும் தந்தையாகிய கடவுளின் அன்பும் தூய ஆவியாரின் நட்புறவும் இத்தவக்காலத்தில் உங்களோடு என்றும் இருப்பதாக!

ஆயர் இல்லம்

26.02.2022

என்றும் ஈசோ மெசியாவில்

**✞ மார் ஜார்ஜ் இராஜேந்திரன் SDB**
**தக்கலை மறைமாவட்ட ஆயர்**

---

*குறிப்பு: இவ்* ஆயர் திருமுகத்தை பிப்ரவரி 27, 2022 ஞாயிறு *அன்று அனைத்து பங்குகளிலும்* திருப்பலி இடையே வாசிக்கவும்.



Bishop's House, P B No: 12,Thuckalay PO, Kanya kumari Dt- 629 175, Tamil Nadu, India